2016 ஆகஸ்ட் 2]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து துறை ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்துகள் ஏற்படுகின்றபோது,* golden hour *என்று சொல்லக்கூடிய, குறிப்பிட்ட அந்த காலத்திற்குள்ளாக 108 ஆம்புலன்ஸ்கள் விரைந்து செயல்படுகின்றன. மேல்சிகிச்சைகளுக்கெல்லாம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து, கட்டமைப்பு வசதிகளையும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மிகச் சிறப்பாக இன்றைக்கு வடிவமைத்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

விவசாயிகளுக்கு பாதுகாப்பு

***54-திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் பலா மற்றும் முந்திரி விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், ஏழையெளிய மக்களையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய காவல் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதம் வணங்குகிறேன்.*

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், முந்திரி, பலா விவசாயிகளுக்கு அரசு பாதுகாப்பு அளித்திடுமா என்று ஒரு வினாவினை எழுப்பியுள்ளார்கள். மக்களால் நான், மக்களுக்காக நான் என தவ வாழ்வு வாழ்ந்து தமிழகத்தையே காப்பாற்றி

வருகிறார் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழக மக்களைக் காப்பாற்றுவதுபோல், விவசாய மக்களையும், குறிப்பாக, நெய்வேலி தொகுதியில் உள்ள முந்திரி, பலா விவசாயம் செய்யும் விவசாயப் பெருங்குடி மக்களையும், தானே புயலில் இருந்து இன்றுவரை தனி கவனம் செலுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானே புயல் வந்த சுவடே தெரியாமல், இன்றைக்கு அத்தனை நலத் திட்டங்களையும் வழங்கி, கடலூர் மாவட்டத்திற்கு தனி முக்கியத்துவம் அளித்து, வேளாண் குடி மக்களை மட்டுமல்லாமல், அந்த மாவட்ட அனைத்து மக்களையும் காத்து வருகிறார்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாபெரும் அவையிலே இரண்டாம் முறையாக உறுப்பினராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களுடைய வழிகாட்டி அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நெய்வேலி தொகுதிக்குட்பட்ட பண்ருட்டி ஒன்றியப் பகுதிகளிலும், நெய்வேலியிலும்தான் முந்திரி மற்றும் பலா அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. எங்களது பகுதியிலிருந்து ஒரு வருடத்திற்கு மட்டும் 200 கோடி ரூபாய்க்கு முந்திரி ஏற்றுமதியாகின்றது. அதேபோல், பலாப் பழமும் நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது. பண்ருட்டி

2016 ஆகஸ்ட் 2]

பலாவும், முந்திரியும் நாட்டிலேயே அதிக சுவையும், ருசியும் கொண்டதாகக் கருதப்படுகிறது. நீண்ட காலப் பயிர்களான முந்திரியும், பலாவும் பயிரிடப்பட்டதிலிருந்து, பலன் தர ஆரம்பிப்பது மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான். எனவே, 2011 ஆம் ஆண்டில் தானே புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி, பலா விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்குள்ளானார்கள். கடந்த ஆண்டில் பெய்த கன மழையினாலும் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து இதுபோன்ற மேலோட்டமான பதில்களைக் கூறாமல், முந்திரி மற்றும் பலாப் பழ விவசாயிகளுக்கு அரசே வீரிய இரக ஒட்டுக் கன்றுகள் வழங்குதல், பலாப் பழ விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டு பயிற்சி அளித்தல், நெய்வேலி பகுதியில் பலாப் பழத்திற்கு ஓர் ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்துதல், முந்திரிக்கு கோவா மாநிலத்தைப் போன்று minimum support price *என்று சொல்லக்கூடிய குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்தல் போன்ற நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலோட்டமான பதிலை நான் சொல்வதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவதுபோல், நான் அனைத்தையும், விரிவாக, தெளிவாக இங்கே கூற விரும்புகிறேன். நெய்வேலி சட்டமன்றத் தொகுதி விவசாயிகளைக் காப்பாற்றவும், விவசாயிகள் வாழ்வு ஏற்றம் பெறவும், குறிப்பாக, முந்திரி, பலா விவசாயத்தைக் காப்பதற்கும், முந்திரி அடர் நடவினைப் பரவலாக்கச் செய்யும் நோக்கில், மேலிருப்பு கிராமத்தில் சுமார் 4 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் மாதிரி முந்திரி அடர் நடவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மகசூல் கிடைக்கத் துவங்கியுள்ளது. முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகளின் மறுவாழ்விற்காக, 142 விவசாயிகளுக்கு 50 மற்றும் 75 சதவிகிதம் மானியத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

இலவச மின் இணைப்பு, 75 மற்றும் 100 சதவிகிதம் மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம், விருத்தாசலம் 3 இரக முந்திரி கன்றுகள் நடவு செய்தல் போன்ற அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. 'தானே' மறுவாழ்வுத் திட்டப் பணிகள் நீங்கலாக, தேசிய தோட்டக்கலை இயக்ககத் திட்டத்தின்கீழ் முந்திரி பயிர்களுக்கு ஆண்டுதோறும், புதிய விரிவாக்கத்திற்கு, ஹெக்டேருக்கு 12,000 ரூபாய் வீதமும், பழைய தோட்டத்தைப் புதுப்பித்தலுக்கு ஹெக்டேருக்கு 20,000 ரூபாய் வீதமும், முந்திரி கன்றுகள் நடவு செய்ய மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

2015-2016 ஆம் நிதியாண்டில் நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் 238 ஹெக்டேர் பரப்பில் விருத்தாசலம் 3 முந்திரி அடர் நடவு, ஒரு ஹெக்டேருக்கு ரூ.11,250 அரசு மானியத்தில் வழங்கப்பட்டு, திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பலா சாகுபடி விவசாயிகளுக்கு பாலுறு 1 மற்றும் 2 புதிய வீரிய இரக ஒட்டு கன்றுகள் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஹெக்டேருக்கு 20,000 ரூபாய் மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-05

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பல்வேறு சிறப்புத் திட்டங்களினால், கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலி தொகுதி உள்ளிட்ட பகுதிகள் 'தானே' புயலால் ஏற்பட்ட பாதிப்பின் சுவடே தெரியாமல், விவசாயத்தில் தன்னிறைவு பெற்று, வளர்ச்சியடைந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பயிர் வாடும் முன்பே, விவசாயிகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பாதுகாக்க, விவசாயம் செழிக்க, வேளாண் குடிமக்கள் ஏற்றம் பெற, தொடர்ந்து நல்ல பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி, அவர்களை தொடர்ந்து பாதுகாக்க பாடுபட்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஆகஸ்ட் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதெல்லாம் நடந்து கொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகள். ஓர் உதாரணத்திற்கு, பலாப் பழத்தின் தன்மை பற்றி சொல்கின்றேன். பலாப் பழம் பழுத்துவிட்டால், அவற்றை இரண்டு நாட்களுக்குமேல் வைத்திருக்க முடியாது என்று அதன் தன்மை குறித்து அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கடந்த மே மாத சீசனில் ஒரே நேரத்தில் அறுவடை முழுவதுமாக நடந்துவிட்ட காரணத்தினால், விவசாயிகளால் பலாப் பழத்தைப் பாதுகாப்பாக வைக்க முடியவில்லை. அவற்றைப் பதப்படுத்த கிடங்குகள் வேண்டும் என்றுதான் நாங்கள் கேட்கிறோம். பதப்படுத்த கிடங்குகள் அமைத்துத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.*

அதேபோன்று, பலாப் பழ விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து, அரசின் திட்டங்களுக்காக காத்திருந்து பார்த்துவிட்டு, நானே என்னுடைய சொந்த செலவில், இத்துறையில் வல்லுநர்களாக இருக்கக்கூடியவர்களையும், பிரசித்தி பெற்றவர்களையும் கேரள மாநிலத்திலிருந்தும், பாண்டிச்சேரி மாநிலத்திலிருந்தும் வரவழைத்து, சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களில் விவசாயிகளுக்கு பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தினேன். இதுகுறித்து நாளிதழ்களில் செய்திகளெல்லாம் வந்திருக்கின்றன. இரண்டு நாட்கள் செய்திகூட இருக்கின்றது. எனவே, அரசு நீண்டகால அடிப்படையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். விழிப்புணர்வு இல்லாத விவசாயிகளுக்கு, விழிப்புணர்வுப் பயிற்சியை அளித்தால், இப்பொழுது 100 ரூபாய்க்கு விற்கப்படும் பலாப் பழத்தை, விவசாயிகள் 10 முதல் 15 மடங்கு இலாபத்திற்கு, ரூ.1,500/- முதல் ரூ.2,000/- வரை விற்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராசேந்திரன், கேள்வி நேரத்தில் கேள்வியைக் கேளுங்கள். விரிவாகப் பேசுவதற்கு இது மானியக் கோரிக்கை அல்ல. கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சிகளை அரசு செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தைத் தொடங்கினாலும், அதைத் தொடர் நிகழ்ச்சியாக நிறைவேற்றுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிக நிதியை வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் எங்கெல்லாம் விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அங்கெல்லாம் குளிர்பதனக் கிடங்குகளையும், சேமிப்புக் கிடங்குகளையும் ஏற்படுத்தி, அத்தனை விவசாயப் பொருட்களையும் பாதுகாத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றுவதற்கு, துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

நூலகம்

*__658—திரு. எச். வசந்தகுமார்:__

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—